Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 199/2018**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக்குமார் | கிராமம் | : | பையர்நாயக்கன்பட்டி |
| தந்தை பெயர் | : | மணி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 32 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் ஆஜர். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **5th Day of February 2026.**

**முதல் விசாரணை**

நான் பையர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், ஆசா.1ஐ தெரியும்.

சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அசா1 க்கும் எதிரிகளுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் தகராறு குறித்து சம்பவ இடத்தை காட்டும்படி கேட்டுக்கொண்டதன்படி நான் தகராறு நடந்த இடத்தை நான் காட்டினேன். போலீசார் என்னிடம் டைரியில் கையொப்பம் பெற்றார்கள்.

இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் பார்த்தேன். எந்த தேதி என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்ததாக நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். நான் அசா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 199/2018**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவா | கிராமம் | : | பையர்நாயக்கன்பட்டி |
| தந்தை பெயர் | : | சேட்டு | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 32 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் ஆஜர். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **5th Day of February 2026.**

**முதல் விசாரணை**

நான் பையர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், ஆசா.1ஐ தெரியும்.

அசா1 க்கும் எதிரிகளுக்கும் இடையில் எப்போது தகராறு ஏற்பட்டது என்று தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எங்கள் பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான்.

கடந்த 29.07.2018ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது ஆஜர் எதிரிகள் அசா.1ஐ தடுத்து நிறுத்தி தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தினார்கள். மேலும் எதிரிகள் உருட்டுக்கட்டையால் அசா.1ஐ அடித்து காயப்படுத்தி கட்டையை காட்டி கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**